மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக 115 வீடுகள் இந்த ஆண்டு கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. வரும் ஆண்டுகளிலே நிதிநிலையைப் பொறுத்தும், ஹட்கோ போன்ற நிறுவனங்களிலிருந்து நாம் பெறுகின்ற கடன் தொகையைப் பொறுத்தும், அதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 308, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

308—

செங்கத்தில் பெண்கள் சிறுதொழில் பயிற்சி மையம் துவங்குதல்

23669-டாக்டர் பெ. வீரபாண்டியன் :*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

செங்கம் நகரில் பெண்களுக்கான சிறுதொழில் பயிற்சி மையம் துவங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைவிட சிறுதொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்களின் மேம்பாட்டிற்காக நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் மிக முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் திட்டத்திலே நாம் வெற்றி அடைந்திருக்கிறோம். சிறுதொழில்களுக்கு அரசின் அனுமதி கேட்டவுடனே கிடைக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 3400 பெண் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்திருக்கிறோம். நடப்பு நிதி ஆண்டில், 1400 பேர்களுக்கு, பெண் தொழில் முனைவோர்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறோம். செங்கம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், செங்கத்தை மையமாகக் கொண்டு, பெண்களுக்காக தொழில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 17]

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரில் பெண்களுக்கு சிறு தொழில் பயிற்சி மையம் துவங்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான் கேள்வி. இப்போது தொழில் முனைவோருக்கு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அங்கு தொழில் முனைவோர்கள் முன்வருவார்களே யானால், அதைப் பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்கள் 1993-94-வருடம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது சிட்கோ மூலமாக உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை செங்கம் தொகுதிக்கு அமைத்துத் தருவதாகச் சொன்னார்கள். அதனுடைய ஆயத்தப் பணிக்காக மாவட்ட தொழில் மைய அதிகாரிகள் புதுப்பாளையம் ஒன்றியத்தில் பெரியகுளம், செங்கம் ஒன்றியத்தில் மண்மலை, மேல்புதூர் ஆகிய கிராமங்களைப் பார்வையிட்டார்கள். தொழில் தொடங்க வேண்டுமென்றால், அடிப்படை தேவைகளை தொழில் முனைவோருக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். உதாரணமாக இடம், காம்பவுண்டு சுவர், மின்சாரம், தண்ணீர் இவற்றையெல்லாம் நாம் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தொழில் முனைவோர்கள் மிக ஆர்வத்துடன் முன்வருவார்கள். இப்போது அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி விரிவான அறிக்கையை அரசு அதிகாரிகளிடம் நாம் கேட்டிருக்கிறோம். அது ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து அரசுக்கு அந்த விரிவான அறிக்கை வந்தவுடன் அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 309, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

309—

மலர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்தல்

***24857**-திரு. கா. பூ. முனுசாமி :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-